★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 35630

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ✱ The Official Organ Of The D.P.F.

மலர் 4} சென்னை: ஐப்பசி 4உ சனி (20—10—56) ★ ★ வெளியீடு: ஐப்பசி 5உ ஞாயிறு (21—10—56) {இதழ் 113

'மிக இலட்சணமான நிர்வாகம்'

. . சிகார் மாவட்ட மருத்துவம், மற்றும் சுகாதார இலாகா அதிகாரியான டாக்டர் கே. டி. சர்மா பெரும் குழப்பத்திற்கு ஆளாக்கப்பட்டிருக்கிறாராம்...காரணம்?

தன்னிடமிருந்து பொறுப்புகளை ஏற்றுக்கொள்ள இரண்டு அதிகாரிகள் வந்துள்ளனராம். எவரிடத்தில் பொறுப்பைத் தருவது என்ற குழப்பம்தான் சர்மாவுக்கு!

டாக்டர் மதுர் என்பார், மாநில சர்க்கார் மத்திய அலுவலகத்திலிருந்து இந்த உத்தியோகத்திற்கு நியமிக்கப்பட்டிருக்கிறார்; அதேபோது, அதே உத்தியோகத்திற்கு டாக்டர் முகர்ஜி என்பார் மாநில கல்வி இலாகா அதிகாரியால் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

சென்னை சர்க்காருக்கு டெல்லி கரி பூசுகிறது!

'எல்லைக் கமிஷன் வேண்டும்' என்ற கோரிக்கை குப்பைக் கூடையில்!

மண்டலக் குழு கவனிக்குமாம்

மீனக்கரைத் திட்டமும் திருப்பி அனுப்பப்பட்டு விட்டது

காமராசர் சர்க்காருக்குப் பதவியே பிரதானம்—மக்கள் நலன் அல்ல என்ற உண்மையை முழுவதுமாகத் தெரிந்து கொண்டிருக்கும் டில்லி, காமராசருக்குக் கரிபூசும் வேலையை சுலபமாக—சர்வசாதாரணமாகச் செய்துகொண்டிருக்கிறது.

'ஆந்திராவுடன் எங்களுக்குள்ள எல்லைத் தகராறினைத் தீர்த்துவைக்க ஒரு எல்லைக் கமிஷன் நியமிக்க வேண்டுகிறோம்' என்று, காமராசர் சர்க்கார் டில்லிக்கு 'காவடி' எடுத்திருந்தார்கள் அல்லவா? டில்லி சர்க்கார் சார்பில் உள்நாட்டு மந்திரி பண்டித பந்த், முதன்மந்திரி காமராசருக்கு எழுதியுள்ள கடிதத்தில், 'எல்லைக் குழு அமைக்க வேண்டும்' என்ற சென்னையின் கோரிக்கை பற்றி எதுவுமே குறிப்பிடவில்லையாம்!

புதிய மாநில அமைப்பிற்குப் பிறகு அமையும் மண்டலக் குழு இந்தத் தகராறு குறித்துக் கவனிக்கும் என்றும், அங்கு தகராறுக்கு ஒரு முடிவு ஏற்படவில்லையானல் என்ன செய்வது என்பது பற்றிப் பின்னர் யோசிக்கலாம் என்றும் பண்டித பந்த் கடிதம் கூறுகிறதாம்!

★

நீர்ப்பாசனத் திட்டக் கோரிக்கைக்கும் அதே கதி!

மீனக்கரை அணைக்கட்டுத் திட்டம் ஒன்றை இரண்டாம் திட்டத்தில் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று கோரியிருந்தனர், டில்லியிடம் சென்னை சர்க்கார்!

ஆனல் டில்லியோ, குட்டக்குட்டக் குனிபவர்தான் காமராசர் சர்க்கார் என்பதால், அந்தத் திட்டத்தைத் திரும்பவும் காமராசருக்கே அனுப்பிவைத்து, 'சில நிலைகளைப்பற்றி இந்தத் திட்டத் தயாரிப்பாளர்கள் தகுந்த கவனம் செலுத்தவில்லை' என்று காரணமும் கூறியிருக்கின்றனராம்!

திட்டத்திற்கான முழு விளக்கவோடு, திட்டத்தின் செலவு மதிப்பீட்டைக் குறைத்துத் திரும்ப அனுப்பி வைக்குமாறும் டில்லி கோரியுள்ளதாம்!

விருதுநகரில் கழகத் தோழர்களின் பேரார்வம்

ஆய்வுக் குழுவினரிடம் உற்சாகமுடன் சாட்சியமளித்தனர்

தேர்தல் ஆய்வுக் குழுவினரான தோழர்கள் இரா. நெடுஞ்செழியன், ஈ. வெ. கி. சம்பத், என். வி. நடராசன், கே. ஏ. மதியழகன் ஆகியோர் 18—10—56 இரவு 10-30 மணிக்கு விருதுநகர் வந்து சேர்ந்தனர்.

முசாபரி பங்களாவின் வாயிலில் மாவட்டச் செயலாளர் இ. ல. ம. சவுந்திரபாண்டியன், நகரச் செயலாளர் சுப்பிரமணியம், எம். எஸ். இராமசாமி ஆகியோருடன் ஏராளமான கழகத் தோழர்களும், பொது மக்களும் கூடி நின்று ஆய்வுக் குழுவினரை வரவேற்றனர்.

பின் பொதுச்செயலாளர், ஆய்வுக் குழுவின் பணியை அனைவருக்கும் எடுத்து விளக்கியதோடு விவரம் அறிவிக்க வேண்டிய முறைகளைப் பற்றியும் குறிப்பிட்டார்.

தேர்தல் நிதியைத் திரட்டுவதில் அனைவரும் கடமை உணர்ச்சியைக் காட்டவேண்டுமென்றும் வேண்டிக் கொண்டார்.

அடுத்து, ஆய்வுக் குழுவினர் பிரத்தியேக இடத்தில் விசாரணையைத் துவக்கினர்.

இராமநாதபுரம் தொகுதி, முதுகளத்தூர் தொகுதி, அருப்புக்கோட்டைத் தொகுதி, திருவில்லிப்புத்தூர் தொகுதி, சாத்தூர் - விருதைத் தொகுதி, சிவகாசித் தொகுதி, திருச்சுழித் தொகுதி ஆகிய இடங்களிலிருந்து வந்திருந்த கழகப் பிரதிநிதிகளும் பிரமுகர்களும் தேர்தல் சூழ்நிலைக்கான விவரங்களை விளக்கிக் கூறினர். ஆய்வுக் குழுவினர் கேட்ட சில கேள்விகளுக்கும் விளக்கம் அளித்தனர்.

கழகச் சார்பில் ஒவ்வொரு தொகுதியிலும் போட்டியிட வேண்டுமென்றும், தலைமைக் கழகம் இடும் பணியை இனிது நிறைவேற்றத் தயாராயிருப்பதாயும் விருதுநகர் தோழர்கள் மிகுந்த உணர்ச்சியுடன் கூறினர்.

ஆய்வுக் குழுவின் பணி இரவு 2 மணிக்கு முடிவுற்றது.

பங்களாவிற்கு வெளியே பொது மக்களும் காங்கிரஸ்காரர்கள் உள்ளிட்ட மாற்றுக் கட்சியினரும் ஆய்வுக் குழுவினர் வேலைத்திட்டம் பற்றிய விவரங்களை அறிய ஆவலுடன் காத்திருந்தனர்.

ஆய்வுக் குழுவினரின் வருகை விருதை அரசியல் வட்டாரத்தில் மிகுந்த பரபரப்பையும் கழகத் தோழர்களிடையே பேரார்வத்தையும் உண்டாக்கியிருக்கிறது.

19-10-56 காலை 7-மணிக்கு ஆய்வுக்குழுவினர் விருதையிலிருந்து திருநெல்வேலிக்குப் புறப்பட்டுச் சென்றனர்.

ஆய்வுக் குழுவினரிடம் பல தோழர்கள் தேர்தல் நிதிக்காகச் சிறு தொகைகளை அளித்து மேலும் தருவதாக உறுதியுமளித்தனர்.

சென்னை-அயனவரத்தில் மற்றொரு தொழிற்சாலை நிறுவத் திட்டமாம்!

ரூ. 3 கோடி செலவாகும்; 3000 பேர் பணியாற்றும் வாய்ப்புப் பெறுவர்?

புதுடில்லி, அக். 19—

பெரம்பூரில் இரயில் பெட்டிகள் கட்டும் தொழிற்சாலைக்கு இரண்டு மைல் தூரத்திலுள்ள அயனவரத்தில், இரயில் பெட்டிகளுக்குள் வசதிகளை அமைக்கும் தொழிற்சாலை ஒன்று ஏற்படுத்த இரயில்வே போர்டு தீர்மானித்துள்ளதாம்.

இந்தத் திட்டத்திற்கு ரூ. 3 கோடி செலவாகுமாம்.

இதனுல் 3,000 பேருக்கு வேலை கிடைக்கும் என்று நம்பப்படுகிறதாம்.

ரூ. 7 கோடி செலவில்!

உதகையில் தொழிற்சாலை நிறுவ ஜெர்மன் நிபுணர்கள் சிபாரிசு

டில்லி சர்க்கார் முடிவு என்ன?

சென்னை மாநிலத்தில் உதகையில், ரூ. 7 கோடி செலவில், கச்சா பிலிம் உற்பத்தி செய்யும் தொழிற்சாலையை நிறுவலாம் என்று ஜெர்மன் நிபுணர்கள் சிபாரிசு செய்துள்ளனர்; இந்தச் சிபாரிசின் மீது டில்லி சர்க்கார் விரைவில் முடிவு செய்யும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மொத்தத்தில் இந்தத் தொழிற்சாலையில், இரசாயனத் துறை எஞ்சினீயர்கள் புகைப்படத் தொழில் நுணுக்கம் தெரிந்தவர்கள் ஆகியோர் உள்ளிட்ட 1,500 பேர் வேலை பெறும் வாய்ப்பு உள்ளதாம்.

ரூ. 4 கோடி செலவில் ஆராய்ச்சிக் கழகம்

ரூ. 4 கோடி செலவாகுமென மதிப்பிடப்பட்டுள்ள மின்விசை எஞ்சினீயரிங் ஆராய்ச்சிக் கழகமொன்றை நிறுவுவது சம்பந்தமான ஒரு திட்டத்தை டில்லி சர்க்கார் பரிசீலனை செய்து வருவதாகத் தெரிகிறது.

காரணம் அதுதானு?

நாகபுரி, அக். 18—

"போதிய இடவசதியில்லாமை, வகுப்புகளில் நெரிசல், தகுதியுள்ள ஆசிரியர்கள் பற்றாக்குறை, ஆசிரியர்கள்—மாணவர்களுக்கிடையே நெருங்கிய உறவு இன்மை ஆகியவைகளே பல்கலைக் கழகத்தின் 'தரக் குறைவு'க்கு முக்கியக் காரணங்களாகும்,"

என்று, பல்கலைக் கழக மானியக் குழுத் தலைவர் தேஷ்முக் அறிவித்துள்ளார்.

முன்னுள் மந்திரிமீது ஒழுங்கு நடவடிக்கை

காங்கிரசைக் கண்டித்துக் கட்டுரை எழுதியதே காரணமாம்

புதுடில்லி, அக். 19—

பஞ்சாப் மாநிலத்தின் முன்னுள் கல்வி மந்திரியான லாலா ஜெகத் நாராயணன், காங்கிரசில் எந்த ஒரு தேர்ந்தெடுக்கப்பட்ட பதவியையும் ஓராண்டிற்கு வகிக்கக் கூடாதெனத் தடை விதிக்கப்பட்டிருக்கிறாராம்.

இவர் தனது பத்திரிகையில், பிரதேசக் காங்கிரஸ், அகில இந்தியக் காங்கிரஸ், பஞ்சாப் மந்திரி சபை ஆகியவைபற்றி கண்டித்துக் கட்டுரைகள் எழுதிவந்தாராம்.

இவர், பஞ்சாப் மாநிலத்திற்கெனவகுக்கப்பட்டுள்ள மண்டலத் திட்டத்தைக் கண்டித்ததுடன் ஒரு வகுப்பு மற்ற வகுப்போடு மோதிக்கொள்ளச் செய்யும் வகையிலும் கட்டுரைகள் எழுதினராம்.

இந்தக் குற்றச்சாட்டுகளை பிரதேசக் காங்கிரஸ் அவர்மீது சுமத்திற்று; அகில இந்திய காங்கிரசின் ஒழுங்கு நடவடிக்கைக் குழு மேற்கண்ட நடவடிக்கைகளை மேற்கொண்டதாம்.

இதனுல் ஜெகத் நாராயணன், இப்போது தான் வகித்துவரும் அகில இந்திய காங்கிரஸ் குழு உறுப்பினர் பதவியையும், பிரதேசக் காங்கிரஸ் உறுப்பினர் பதவியையும் இராஜிநாமாச் செய்ய வேண்டிவரும் என்று தெரிகிறது.

தனிமையை நாடுவோருக்கு

முதியோர் இல்லம்!

அகமதாபாத், அக். 18—

'முதியோர் இல்லம்' ஒன்று தீபாவளியன்று இங்கு திறக்கப்படவிருக்கிறதாம்!

'வானப் பிரஸ்த சேவா சமாஜ்' என்ற 'வயது வந்த சமூக சேவகர்'களின் இயக்கம்தான் இந்த இல்லத்தினைத் துவக்குகிறதாம்

எவரையும் காப்பாற்றவேண்டிய அவசியம் இல்லாதவர்கள், அல்லது தனிமையை நாடுபவர்கள்—தனியாகவோ அல்லது கணவனும் மனைவியுமாகவோ இந்த முதியோர் இல்லத்தில் வசிக்கலாமாம்!

இந்த சமாஜத்தில் இப்போது 250 பேர் உறுப்பினர்களாகியுள்ளனராம்

இந்த இல்லத்தில் இப்போது சுமார் 12 பேர்கள் மட்டும் அனுமதிக்கப்படுவார்கள் என்றும், இந்த 'சோதனை' வெற்றி பெறுமானல், பின்னர், 'இல்லம்' விரிவுபடுத்தப்படும் என்றும் கூறப்படுகிறது.

'ஆலப்புழை தனி மாவட்டமாக வேண்டும்'

பொது வேலைநிறுத்தத்தின் மூலம் மக்களின் கோரிக்கை

ஆலப்புழை, அக். 19—

ஆலப்புழையைத் தலைநகராகக் கொண்டு தனி மாவட்டம் ஏற்படுத்த வேண்டும் என்று கோரி, இங்கு மக்கள் பொது வேலைநிறுத்தம் செய்துள்ளனர்.

வக்கீல்கள் நீதி மன்றங்களுக்குச் செல்லவில்லை; மாணவர்கள் வகுப்புகளுக்குச் செல்லவில்லை; தொழிலாளர்கள் வேலைக்குப் போகவில்லை; சினிமாக் கொட்டகைகளும், சிற்றுண்டிச்சாலைகளும் கடைகளும் மூடப்பட்டிருந்தன.

உங்கள் குறிப்புக்கு!

இந்தியாவின் மக்கள் தொகை 37½ கோடி; கல்லூரியில் படிப்போர் தொகை 7½ இலட்சம்!

பிரிட்டனின் மக்கள் தொகை 5 கோடி; கல்லூரியில் படிப்போர் இலட்சம் பேருக்கும் அதிகம். இவர்களுக்காகச் செலவிடப்படும் தொகை ரூ. 45 கோடி!

இந்தியாவில் அடுத்த ஐந்தாண்டுக் காலத்தில் கல்லூரிகளுக்காகச் செலவிட முடிவு செய்யப்பட்டுள்ள தொகை ரூ. 6 கோடி தான்!

இந்தத் தகவலை, பல்கலைக் கழக மானியக் குழுத் தலைவர் தேஷ்முக் தெரிவித்துள்ளாராம்.

நம் நாடு
தி.மு.க. தினஇதழ், ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 20-10-'56 சனி

உத்தமர் சங்கரலிங்கனார் நாள்!

78 வயது; பழம் பெரும் காங்கிரஸ்காரர்; விடுதலை கோரியதற்காகச் சிறையில் சித்திரவதைப்பட்டிருக்கிறார்; பெருமைப்படத் தக்கத் தியாக சீலர்; போற்றத்தக்க எளிய வாழ்க்கை நடத்தியவர்; காந்தியத்தில் அசையாத—உறுதி மிக்க நம்பிக்கை கொண்டவர்; ஏழை எளியோருக்கு வாழ்வு கிடைக்கவேண்டும் என்ற புனிதமான இலட்சியம் கொண்ட ஊழியர்—இந்த சங்கரலிங்கனார் தான் தாயகத்திற்கு 'தமிழ்நாடு' எனப் பெயரிடக்கூட மறுத்து விட்டவர்களை—ஏழை எளியோரைப் பஞ்சத்தால்—பசியால்—பட்டினியால் - பற்றுக்குறையால்—வேலையில்லாத் திண்டாட்டத்தால் வாடவிட்டு விட்டு, கொள்ளைச் சம்பளம் பெற்றுக் குதூகலமாக வாழ்ந்து கொண்டிருந்தவர்களைக்கண்டு மனம் குமுறினர்.

தமிழ் மக்களது இயற்கையான விருப்பம் தங்கள் தாயகத்திற்கு 'தமிழ் நாடு' எனப் பெயரிட வேண்டுமென்பது. இந்தச் சாதாரண விருப்பத்தைக்கூட நிறைவேற்றுவதர்கள், காந்தியாரின் பெயரால் காங்கிரசார் எனக் கூறிக்கொண்டு, ஆட்சியிலமர்ந்திருப்பது கண்டு வெட்கப்பட்டார்—வேதனைப்பட்டார் அந்தக் காந்தியவாதி.

'சென்னை மாநிலத்திற்குத் தமிழ் நாடு என்று பெயரிட வேண்டும்; அமைச்சர்களின் சம்பளம் குறைக்கப்பட வேண்டும்; அமைச்சர்களின் சுற்றுப் பயணமும் அதனுல் ஏற்படும் வீண் பண விரயமும் தவிர்க்கப்படவேண்டும்' என்பன போன்ற சில கோரிக்கைகளை ஆட்சியாளருக்கு அனுப்பி, அவற்றை நிறைவேற்றித் தருமாறு கேட்டார் — அந்தத் தியாகசீலர்.

ஆட்சியாளரோ கேளாக் காதினராகிவிட்டனர். இந்த நிலையில், காந்தியவாதியான அவருக்கு உண்ணாவிரதம் மேற்கொள்ளுவதைத் தவிர வேறு வழி புலப்படவில்லை. 'இந்தக் கோரிக்கைகளை நிறைவேற்று விட்டால் சாகும்வரை உண்ணாவிரதம் இருக்கப்போகிறேன்' என்று அறிவித்து விட்டு, உண்ணாவிரதத்தினை மேற்கொண்டார், கடந்த சூலைத் திங்கள் 27-ம் நாளன்று.

அவர் அணு அணுவாகத் தன்னுயிரைப் பலியிட்டுக் கொண்டிருந்த நேரத்திலும் கூட, ஆட்சியாளரின் கவனம் அவர் பக்கம் திரும்பாது போனதை எண்ணினுல், மனிதப் பண்பும் உள்ளமும் கொண்டவர்கள்தான் ஆட்சியிலிருக்கின்றனரா என்று சந்தேகம் ஏற்படுகிறது.

பல கட்சித் தலைவர்களும் திரு. சங்கரலிங்கனுரைச் சந்தித்து, உண்ணாவிரதத்தைக் கைவிடுமாறு கேட்டுக்கொண்டும், அவர் மறுத்துவிட்டார். 'கோரிக்கைகளுக்காகச் சாகத் தான் வேண்டும் என்றுல் சாகிறேன்' என்று உறுதியோடு கூறிவிட்டு, உண்ணாவிரதத்தைத் தொடர்ந்தார். அவரது நியாய கட்டத்தை நெருங்கியபோதும்- தொட்டபோதும் கூட, ஆட்சியாளர் மனம் கல்லாகவே இருந்திருக்கிறது. விளைவு, 78 நாட்களுக்குமேல் உண்ணாமலிருந்த அவர், மதுரை மருத்துவ மனையில், கடந்த 13-ந் தேதியன்று காலை கடைசி மூச்சு விட்டுவிட்டுக் கண்மூடி விட்டார்.

சில கோரிக்கைகளுக்காக, வேறு யாரும்கூட அல்ல—காங்கிரஸ்காரர் ஒருவர், அதுவும் தீவிரமான காந்தியவாதி—புனிதமான தியாக சீலர்—உண்மையான தேசத் தொண்டன்—எளிய வாழ்வில் நாட்டம் கொண்ட ஒரு உத்தமர் உண்ணாவிரதம் இருக்கிறர், ஒரு நாளல்ல இருநாளல்ல—அவர் ஒன்றும் 'வேள்வி' நடத்தவில்லை, அல்லது வேடிக்கை காட்டவில்லை; தான் மட்டுமின்றி, நாட்டில் உள்ள நியாயவான்கள் அனைவரும் சரி என ஒப்பும் சில கோரிக்கைகளுக்காக, 78 நாட்கள் வரை உண்ணாவிரதம் இருக்கிறர். அவரது உயிரைக் காப்பாற்ற வேண்டும் என்ற சாதாரண மனிதாபிமானம்கூட இல்லாத இரும்பு நெஞ்சம் கொண்டவர்களாகக் காமராசர் சர்க்கார் இருந்திருக்கின்றனர் என்றுல், இவர்களை மனிதர்கள் என்று எப்படி மதிப்பது?

மக்களை மதியாத—குடிமக்களின் உயிர்காக்க வேண்டும் என்ற மனிதாபிமானம் அற்ற இந்த மதோன்மத்தர்களை ஆட்சியில் வைத்து வேடிக்கை பார்க்கின்றனரே தமிழ் மக்கள், அதுதான் வேதனையிலும் வேதனை!

'கோரிக்கைகளைப் பரிசீலிக்கிறோம்; கவனிக்கிறோம்; முடிந்தவற்றை நிறைவேற்றுகிறோம்' என்று காமராசர் சர்க்கார் உறுதிமொழி தந்திருந்தால், சங்கரலிங்கனார் அநியாயமாக நம்மிடமிருந்து பிரிக்கப்பட்டிருக்கமாட்டாரே! ஆட்சியாளரை இன்று ஊரும் உலகும் பழியும் சுமத்தியிருக்காதே. ஆனுல், 'இந்தச் சாதாரணப் பெருந்தன்மைகூட அற்றவர்கள் நாங்கள்' என்பதை இந்தக் காமராசர் சர்க்கார், மீண்டும் ஓர் முறை மெய்ப்பித்துக் கொண்டிருக்கிருர்கள்.

சங்கரலிங்கனுரின் மறைவு கேட்ட மாற்றுக் கட்சியினர் அனைவரும் துடித்துப் போய் விட்டனர்; சோகத்தால் — வேதனையால் கண்ணீர் வடிக்கின்றனர். சங்கரலிங்கனுரின் குடும்பத்தாருக்குத் தமிழ் மக்கள் காணிக்கையாக்கியிருக்கும் கண்ணீர்த் துளிகளோடு நம்முடைய கண்ணீரையும் கலக்கிறோம் நாம்.

புனிதரான சங்கரலிங்கனுருக்கு வரும் 21-ந் தேதியன்று தமிழ் மக்கள் ஆங்காங்கே ஊர்வலங்களிலும், கூட்டங்களிலும் திரண்டு, தங்கள் மரியாதையைத் தெரிவித்துக் கொள்ளவேண்டுகிறோம். அன்றைய கழகத் தோழர்களின் கடமை குறித்து நமது பொதுச் செயலாளர் அறிக்கை தந்திருக்கிருர். தோழர்கள் கடமை யாற்றுவார்களாக.

சங்கரலிங்கனுர், எந்தக்

தேவிகுளம்—பீர்மேடு பகுதிகளை பறிகொடுத்த காமராசர்

'புதுவையில் கலகமூட்டுவது ஏன்?'

'எங்கள் விவகாரங்களில் தலையிட வேண்டாம்'

புதுவை காங்கிரஸ் தலைவர் எச்சரிக்கை

சென்னை, அக். 18—

"செங்கோட்டைப் பிரிவினைப் பிரச்சினையிலும், தேவிகுளம்—பீர்மேடு பிரச்சினையிலும் தோல்விகண்ட காமராசர்—தனது தலைமைப் பதவியின் செல்வாக்கைப் பயன்படுத்த முடியாத காமராசர், அவரது தலைமையைச் சிறிதும் வரவேற்காத புதுச்சேரியில் கலகமூட்டுவது கண்டு நான் மிக வருந்துகிறேன்."

என்று, புதுவை காங்கிரஸ் கன்வீனரான முத்துவெங்கடப்ப ரெட்டியார் அறிக்கை ஒன்றில் குறிப்பிட்டிருக்கிறர்.

"புதுவைப் பகுதி கட்சி அரசியலில் தலையிடாதிருக்குமாறு சென்னை காங்கிரஸாரைக் கேட்டுக்கொள்கிறேன். புதுவைத் தலைவர்கள் சென்னையிலிருந்தோ அல்லது வேறெங்கிலுமிருந்தோ தலைவர்களை வரவழைத்துக் கொண்டுதான் காரியம் பார்க்க வேண்டும் என்ற நிலையில் இல்லை. அவர்கள் தாங்களாகவே தங்கள் விவகாரங்களைக் கவனித்துக்கொள்ளும் ஆற்றல் பெற்றிருக்கிருர்கள்,"

என்றும் அவர் அந்த அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிருர்.

"புதுவை ஒரு தனிப் பிரதேசமாகவே இருக்கும் என்று நேரு, தேபர் போன்ற தலைவர்கள் உறுதி கூறியிருக்கின்றனர்; காமராசரும் தேர்தல் காலத்தில் உறுதி கூறியிருக்கிறர். அப்படியிருக்க, காமராசர் தலைமையில் நடைபெற்ற மாநாடு ஒன்றில், 'புதுவை பகுதிகள் தமிழ் நாட்டுடன் இணைய வேண்டும்' என்று தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டிருப்பது கண்டு அதிர்ச்சியுற்றேன்; உண்மையில் காமராசரின் உடன்பாட்டோடு தான் அந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது என்றுல், அது மிகவும் வருந்தற்குரியது; எனெனில், இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றுவதற்கு முன்பாகப் புதுவை மக்களுக்குக் காமராசர் தந்த உறுதி மொழி என்னவது?"

என்றும் முத்துவெங்கடப்ப ரெட்டியார் தன் அறிக்கையில் கேட்டிருக்கிருர்.

இந்தியா—ஐரோப்பா பஸ் போக்குவரத்து!

புதுடில்லி, அக். 17—

இந்தியாவிற்கும்—மேற்கு நாடுகளுக்கும் இடையே பஸ் போக்குவரத்து துவக்கப்படுவதற்கான முயற்சி நடைபெறுவதாக இந்திய பஸ் அதிபர்கள் காங்கிரஸ் தலைவர் குர்தன்லால் அறிவித்தார்.

கடந்த ஜூன் மாதம் ஸ்டாக்ஹோமில் நடைபெற்ற சர்வதேச ரஸ்தா போக்குவரத்து மாநாட்டிற்கு இவர் 'லேலந்த் காமத்' டீசல் பஸ் மூலம் 20,000 மைல் பிரயாணம் செய்து திரும்பியவராவார்.

தென்துருவக் கண்டம்

மேலை வல்லரசுகள் போக்கு பற்றி இந்தியா கவலை

அண்டார்க்டிகா என்று அழைக்கப்படும் தென்துருவக் கண்டம் இந்தியாவைப்போல் ஐந்து மடங்கு பரப்பளவு உள்ளது; இது அமெரிக்கா, தென்ஆப்பிரிக்கா, ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளுக்கு அருகில் உள்ளது.

இரஷ்யா, அமெரிக்கா, பிரிட்டன் போன்ற வல்லரசுகள் இங்கு இடம் பிடித்துள்ளன.

ரஷ்யாவிடம் ஒரு பெரிய பகுதி இருக்கிறது; மின்சாரவிசை வசதியுடன் மூன்று தளங்களை, எல்லா நவீன இராணுவச் சாதனங்களுடனும் ரஷ்யா அமைத்துள்ளது.

"60 இலட்சம் சதுரமைல் பரப்புள்ள இக்கண்டம் இராணுவத் துறையில் முக்கியத்துவம் பெற்றிருப்பதால், உலக சமாதான காரியங்களுக்காக மட்டுமே இக்கண்டத்தை உபயோகிப்பது என்ற உடன்பாடு ஏற்படவேண்டும்" என்று ஐ. நா. சபையில் இந்தியா பிரரேபித்துள்ளது.

அட்லிக்கு டாக்டர் பட்டம்

சென்னை பல்கலைக் கழகம் வழங்கியது

சென்னை, அக். 18—

சென்னைப் பல்கலைக் கழகத்தின் கடந்த 100 ஆண்டுகளில் ஆறு முறை விசேடப் பட்டமளிப்பு விழாக்களில் கௌரவப் பட்டங்கள் அளிக்கப்பட்டிருக்கின்றன.

இன்று பிரிட்டனின் முன்னுள் முதலமைச்சருக்கு சென்னை பல்கலைக் கழகம் 'டாக்டர் ஆப் லாஸ்' என்ற கௌரவப் பட்டத்தை வழங்கியுள்ளது.

10,000 மாணவர்கட்கு விடுதி வசதிகள்

ரூ. $2\frac{1}{2}$ கோடி ஒதுக்கப்பட்டுள்ளது

பம்பாய், அக். 17—

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட முடிவுக்குள் பல்வேறு பல்கலைக் கழகங்களிலும் 10,000 மாணவர்களுக்கு விடுதி வசதிகள் கிடைக்குமென பல்கலைக் கழக மானியக் குழுத் தலைவர் தேஷ்முக் குறிப்பிட்டுள்ளார். இதற்காக ரூ. $2\frac{1}{2}$ கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

கோரிக்கைகளுக்காகத் தன் இன்னுயிரை ஈந்தாரோ, அந்தக் கோரிக்கைகளில் நியாயமான வற்றிற்காகத் தமிழ் மக்கள் மேலும் போராடி, அவற்றை நிறைவேற்றுவதுதான், சங்கரலிங்கனுருக்கு நாம் செய்யக் கூடிய சரியான இறுதி மரியாதையாக இருக்கமுடியும்.

ரூ. 50 கோடி செலவில்!

உலகத்திலேயே மிகவும் உயர்மான கட்டிடம்

880 மாடிகள் அமைந்திருக்கும்

சிகாகோ, அக். 18—

உலகத்திலேயே மிக உயரமான கட்டிடம் கட்ட அமெரிக்கா திட்டமிட்டுள்ளது. உலகப் புகழ் பெற்ற நிபுணர் இதற்கான திட்டத்தை உருவாக்கியுள்ளார்.

இந்தக் கட்டிடம் ஒரு மைல் உயரத்தில் 880 மாடிகள் கொண்டதாக இருக்கும். சக்தியின் அமைப்புபோல் அடிப்பாகம் பெருத்தும், உயரம் போகப்போகக் கூர்மையாகவும் இருக்கும்.

கட்டிடத்தின் வெளிப்புறம் பளபளப்பான அலுமினியம், அல்லது ஜெர்மன் வெள்ளியால் கட்டப்படும்.

இந்தக் கட்டிடத்தைக் கட்டி முடிக்க சுமார் ரூ. 50 கோடி செலவாகுமென்று கருதப்படுகிறது.

ரூ. 3 கோடி செலவில்!

இரயில்வேக்களில் பயிற்சி நிலையங்கள் ஏற்படுத்தப்படும்

புதுடில்லி, அக். 17—

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டக்காலத்தில், ரூ. 3 கோடி செலவில், இந்திய இரயில்வேக்களில் எட்டு பயிற்சி நிலையங்களை ஏற்படுத்தி, மொத்தம் 4,000 தொழிலாளருக்கு, பிட்டர்—தச்சர்—மெகானிக் போன்ற வேலைகளுக்குப் பயிற்சியளிப்பதென முடிவு செய்யப்பட்டுள்ளதாம்.

திருச்சி, மைசூர், பெரம்பூர் ஆகிய இடங்களில் இந்தப் பயிற்சி நிலையங்கள் அமைக்கப்படுமாம்.

சென்னையில்மின்சாரவிப்டு,குழாய்

உற்பத்திச்சாலைகள்

புதுடில்லி, அக். 19—

மின்சார 'லிப்டு'கள் தயாரிக்க சென்னையில் ஒரு கம்பெனிக்கு இந்திய அரசாங்கம் அனுமதியளித்துள்ளது.

ஆண்டுக்கு 720 குழாய்கள் தயாரிக்க சென்னையில் மற்றொரு கம்பெனிக்கு அனுமதியளிக்கப்பட்டது.

வடக்கில்......!

பிகாரைச் சேர்ந்த பரானியில் இரயில் பெட்டிகளுக்கான 'பிரேம்'களைத் தயாரிக்க அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

பாத்பூரில் கட்டிடங்கள், பாலங்கள் முதலியவைகளைக் கட்டுவதற்குத் தேவையான உருக்குச்சாமான்களைத் தயாரிப்பதற்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது. அங்கு 'வாகன்' கட்டும் தொழிற்சாலை ஒன்றும் நிர்மாணிக்கப்படுமென்று தெரிகிறது.

இந்தித் திணிப்பால் இதர மொழி மக்களுக்கு ஆபத்து இல்லையாம்

தத்தார் தத்துவார்த்தம் பேசுகிறர்

ஜெய்ப்பூர், அக். 18—

"இந்தியா ஒரு ஜனநாயக நாடாக வெற்றிபெற வேண்டுமானுல், இந்தியாவிற்கு ஒரு பொது மொழி வேண்டும். அத்தப் பொதுமொழி பிராந்திய மொழிகளின் வளர்ச்சியை பாதிக்காமலிருக்கவேண்டும்.

"இந்தி ஆட்சி மொழியாவதற்கு 15 ஆண்டுகாலத் தவணை தரப்பட்டுள்ளது; இதில், 6 ஆண்டுகள் சீக்கிரமே முடியவிருக்கின்றன. அந்த ஆறுண்டுக்காலத்தில் இந்தி அரசாங்க மொழியாவதற்காகச் சர்க்கார் செய்தது என்ன—மக்கள் செய்தது என்ன என்பதையும், இன்னும் செய்யப்பட வேண்டியது எவ்வளவு என்பதையும் நாம் கணக்கிட்டுப் பார்த்துக்கொள்ளவேண்டும்,"

என்று மத்திய உள்நாட்டிலாகா வில் மந்திரியான பி. என். தத்தார் இந்தி பிரச்சார மாநாடு ஒன்றினைத் திறந்துவைத்துப் பேசும்போது குறிப்பிட்டிருக்கிறர்.

"தங்கள் நலன்களுக்குத் தீங்கு நேரிடும் எனக்கூறி இந்திமொழி ஆங்கிலத்தின் இடத்தைப் பெறுவதை சிலர் எதிர்க்கிருர்கள்,"

என்று கூறிய அவர், 'அப்படி ஒன்றும் இதர மொழி மக்களின் நலன்களுக்கு ஆபத்து வந்துவிடாது' என்றும் ஆறுதல் கூறினாராம்!

இந்தி வழங்காத பகுதிகளில் இந்தியைப் பரப்புவதற்கான யோசனைகள் சிலவற்றையும் அவர் கூறினாராம்.

புரட்சி நடிகர் அன்பளிப்பு

தியாகராயர் கல்லூரிக்கு ரூ. 2,500

சென்னை, அக். 19—

சென்னை தியாகராயர் கல்லூரிக் கட்டிட நிதிக்கு புரட்சிநடிகர் எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள் ரூ. 2,500 வழங்கியுள்ளார்.

கல்லூரி விஞ்ஞானப் பிரிவுக் கட்டிட நிதிக்காக அண்மையில் நடைபெற்ற நாடகக் கலை விழாவின்போது எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள் இரு நாடகங்கள் நடித்துத் தந்தார்.

'இன்பக் கனவு' நாடகம், கடந்த 14-ந் தேதி இரவு அண்ணா அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அப்போது தலைமையுரை ஆற்றுகையில், அண்ணா அவர்களே, தோழர் இராமச்சந்திரன் அவர்களது அன்பளிப்பு குறித்தத் தகவலை வெளியிட்டார்கள்.

அன்றைய நாடகத்தினை எண்ணற்ற தாய்மார் உள்ளிட்ட பல்லாயிரம் மக்கள் கண்டுகளித்தனர்.

கல்லூரிக் குழுத் தலைவர் திரு பார்த்தசாரதி அவர்கள், நாடக விழாவின் நோக்கத்தினை எடுத்துரைத்துவிட்டு, கல்லூரிக் கட்டிட நிதிக்கு உதவியவர்களது பட்டியலையும் படித்துக் காட்டினார்.

பின்னர் கல்லூரி தலைவர் ம. கி சண்முகனார் அவர்கள் அனைவரையும் வரவேற்று, உதவிக்கு நன்றி கூறிக்கொண்டு அண்ணா அவர்களைத் தலைமையுரை ஆற்றுமாறு கேட்டுக்கொண்டார்.

அண்ணா அவர்கள் பேசுகையில் தியாகராயர் கல்லூரி மேன்மேலும் வளருவதற்கு நாட்டவர் உதவி செய்யவேண்டியதின் அவசியத்தை எடுத்துரைத்துவிட்டு, புரட்சி நடிகர் எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள், கல்லூரி நிதிக்காக ரூ 2,500 அன்பளிப்பு வழங்குவார் என்ற தகவலையும் தெரிவித்தார்கள்.

பின் புரட்சி நடிகர் இராமச்சந்திரன் சிறிது நேரம் பேசினார். நன்றி கூறலுக்குப்பின், தொடர்ந்து நாடகம் நடைபெற்றது.

திரு. எம். ஜி. ஆர். அவர்கள் அண்மையில்தான், மதுரைத் தமிழ்ச் சங்கத்திற்கு ரூ. 1000-மும், கோவில்பட்டி வட்டகிராமம் ஒன்றில் உள்ள தாழ்த்தப்பட்டோர் பள்ளிக்கு ரூ. 1,000-மும் அன்பளிப்புத் தந்தது நினைவிலிருக்கலாம்.

★

கிடைத்துள்ள தொகை

கல்லூரிக் கட்டிட நிதிக்காக சுமார் 10 நாட்கள் நடைபெற்ற நாடகக் கலை விழாவின் மூலமாக செலவுபோக சுமார் ரூ. 30,000 வரை மிச்சப்பட்டிருப்பதாகத் தகவல் தரப்பட்டிருக்கிறது.

மணலி திரு இராமகிருஷ்ணன் (முதலியார்) அவர்கள் ரூ. 20,000 அன்பளிப்புத் தந்திருக்கிறார் என்றும், மேலும், சென்னை மற்றும் சுற்றுப்புறங்களில் உள்ள பெரும் வர்த்தகர்கள், தனவந்தர்கள் எல்லாம் தங்களால் முடிந்தவற்றை அன்பளிப்பாகத் தந்துள்ளனர் என்றும் மேலும் பலர் தருவதாக ஒப்புதல் வாக்களித்திருக்கின்றனர் என்றும் தெரியவருகிறது.

இண்டர் தேறியவர்கள் பொது அறிவு!

கர்னூல், அக். 16—

சமீபத்தில் ஆந்திர பப்ளிக் சர்வீஸ் கமிஷன் நடத்திய பரீட்சை ஒன்றில் 'இண்டர்' தேறியவர்கள் கலந்துகொண்டனராம்; அவர்களில் சிலர், வேடிக்கையும் பெரும் பிழையும் மிக்க பதில்களை அளித்தனராம். அந்த பதில்களில் சில:—

1. 'பஞ்சசீலம்' என்பது, பண்டித நேரு சீன ஜனாதிபதிக்கு அளித்த பட்டப் பெயர்!
2. 'பஞ்சசீலம்' என்பது, ஐந்து அழகான பெரிய குன்றுகள்!
3. 'பஞ்சசீலம்' என்பது, இந்தியாவில் புகழ்பெற்ற ஒருநாடு; அங்கு புகழ்பெற்ற கோயில்கள் உள்ளன!
4. 'பஞ்சசீலம்' என்பது, ஐந்து புகழ்பெற்ற — ஆத்மீகப் பெருமைவாய்ந்த கோவில்கள்!
5. 'பஞ்சசீலம்' என்பது, வனவாசத்தின்போது பஞ்சபாண்டவர்கள் தங்கிய இடம்!

மேலும் ஒருசில ருசிகர பதில்கள்:—

வாஸ்கோடிகாமா: தனது உடல் வலுவால் இரயிலை நிறுத்திப் புகழ்பெற்ற இந்திய மல் யுத்த வீரன்!

டென்னிங் தெரு: உயரமாக உள்ள தெருவை மட்டப்படுத்தும், ஓர் நவீன முறை!

வெள்ளை யானை: ரஷ்யாவால் நேருவுக்கு அளிக்கப்பட்ட பெயர்!

பிளாக் அவுட்: இங்கிலாந்தில் உண்டாகும் ஓர் நோய்!

சோலார் எக்லிப்ஸ்: 1. பெரிய நகரம்! 2. மைசூரில் ஓர் சுரங்கம்! 3. திடீரென வரும் மிகவும் பயங்கரமான வியாதி! 4. நோய் போக்கும் எண்ணெய்!

ஸ்பெயின் சர்வாதிகாரி

பொறுப்புகளிலிருந்துவிலகுவாராம்

'வாரிசு' காண பிராங்கோ முயற்சி?

ஸ்பெயின் நாட்டு சர்வாதிகாரியான ஜெனரல் பிராங்கோ, பதவி பொறுப்புக்களைத் துறந்துவிட முடிவு செய்திருப்பதாகக் கூறப்படுகிறது.

அவர் ஸ்பெயினில் உள்ள ஒரே ஒரு சட்ட பூர்வமான அரசியல் கட்சியாயிருக்கும் 'பலாஞ்' என்ற கட்சியின் தலைமைப் பொறுப்பிலிருந்தும் விலகிக் கொள்ளத் திட்டமிட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

பெயரளவுக்கு மட்டும் அவர் சர்க்கார் தலைவராகவும் இராணுவத் தலைவராகவும் இருப்பார் என்றும், பொறுப்புக்களைக் கவனிக்க அவர் சர்க்கார் தலைவர்களையும், கட்சித் தலைவர்களையும் நியமிக்கும் அதிகாரம் மட்டும் பெற்றிருப்பார் என்றும் கூறப்படுகிறது.

இப்படிச் செய்வதின்மூலம், பிராங்கோவிற்குப் பிறகு அவரது இடத்தை நிரப்பக்கூடியவர் எவர் என்ற பிரச்சினைக்குப் பரிகாரம் தேட முயற்சிகள் நடைபெறுவதாகவும் கூறப்படுகிறது. மேலும் இப்படிச் செய்வதின்மூலம், சர்க்கார் அமைப்பு முறையைச் சற்றுத் தளர்த்த முடியும் என்றும் கருதப்படுகிறதாம்.

ஆவரங்காட்டூர் தாழ்த்தப்பட்டோர் குடியிருப்பு

பெருமழையால் வீடுகள் சரிந்து தரைமட்டமாயிற்று

விடிழந்தோருக்கு தி. மு. கழகத் தேர்தல் ஆய்வுக் குழுவினர் ஆறுதல்

கவுந்தப்பாடி, அக். 17—

கவுந்தப்பாடியை அடுத்த ஆவரங்காட்டூரில், கடந்த ஆண்டு டிசம்பர் திங்களில் கோவை மாவட்ட கலெக்டரால் கால்கோள் விழா நடத்தப்பட்டு கட்டப்பட்ட தாழ்த்தப்பட்டோர் காலனியில் உள்ள மொத்தம் 46 வீடுகளில் 4 வீடுகள், இம்மாதம் 1-ந் தேதியன்று பெய்த மழையில் இடிந்து விழுந்து தரைமட்டமாகக் கிடக்கின்றன. பல வீடுகளில் ஒரு பக்கத்துச் சுவர்கள் வெடிப்புற்றுச் சாய்ந்து, எந்நேரத்தில் விழும் என்று தெரியாதவண்ணம் ஆபத்தான நிலையில் இருக்கின்றன.

இந்த வீடுகளில் வசித்து வந்த அரிசனக் குடிமக்கள் தகுந்த வீடு இன்றித் திண்டாடுகின்றனர். விழுந்த வீடுகளைப் பார்வையிட இதுவரையிலும் சமுதாய நலத்திட்ட அதிகாரிகளோ, மற்றெவரோ வரவில்லை.

கடந்த 5-ந் தேதியன்று தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள், மேற்படியூருக்குச் சென்று இடிந்து போன வீடுகள், சேதங்கள், வீடு இழந்தோர் நிலைகளை நேரில் பார்த்துவந்தார். காலனியில் தங்கியிருந்த அரிசன மக்கள் தோழர் சம்பத் அவர்களை அணுகித் தங்கள் குறைகளைத் தெரிவித்தனர். அக்காலனியைக் கட்டும்போது கட்டிட மேற்பார்வையாளர்கள் செய்த அக்கிரமங்களையும், புழுதி மண்ணால் சுவர் எழுப்ப வேண்டாமென்று தாங்கள் பலமுறை கேட்டும் அதைப் பொருட்படுத்தாமல் அவர்கள் புழுதி மண்ணாலேயே சுவர் எழுப்பின அநியாயத்தையும், இது குறித்து மாநிலமுதலமைச்சருக்கும் அரிசன இலாகா அமைச்சருக்கும் விண்ணப்பங்கள் எழுதியும், தங்களுக்கு எந்தவிதப் பதிலும் கிடைக்கவில்லையென்று கூறி, அவ்விண்ணப்பங்களைத் தோழர் சம்பத் அவர்களிடம் காட்டினர். தோழர் சம்பத் அவர்கள் தாம் சென்னை திரும்பினதும் இதுபற்றிக் கவனிப்பதாகக் கூறினார்.

★

ஆய்வுக் குழுவினர் பார்வையிட்டனர்

விடிழந்தோருக்கு ஆறுதலும் வேண்டுகோளும்

தி. மு கழகத் தேர்தல் சூழ்நிலையை அறிவதற்கென சுற்றுப் பயணத்தில் ஈடுபட்டிருக்கும் கழகத் தேர்தல் ஆய்வுக் குழுவினரான பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன், என். வி. நடராசன், ஈ வெ. கி சம்பத், கே. ஏ. மதியழகன் ஆகியோர், நேற்றைய முன் தினம், கிளைக் கழகச் செயலாளர் இரா. துரை, மற்றும் கழகத் தோழர்களுடன் சென்று அவ்விடத்தைப் பார்வையிட்டனர்.

அந்நாளில், மொத்தம் 26 வீடுகள் இடிந்து விழுந்து தரைமட்டமாகவும், மற்றுமுள்ள எல்லா வீடுகளும் இடிந்துவிழும் தருவாயிலுமிருக்கும் நிலையையும் கண்டனர்.

அரிசன மக்கள் அனைவரும் ஒன்று திரண்டு ஆய்வுக்குழுவினரிடம் தங்கள் குறைகளைக் கூறி முறையிட்டனர். இந்த இழிநிலைக்குக் கொண்டுவந்த சம்பந்தப்பட்டவர்கள் மீது தகுந்த நடவடிக்கை எடுக்க சர்க்காரைக் கேட்டுக்கொள்ள வேண்டினர். பின்னர், அக்காலனி தாழ்த்தப்பட்டோரிடையே ஆய்வுக்குழுவினர் அமர்ந்து புகைப்படமும் பிடித்துக்கொண்டனர்.

தாங்கள் சென்னை திரும்பியதும் அவர்களுடைய குறைகளைத் தீர்க்க ஆவன செய்வதாக உறுதி கூறியதுடன், ஆய்வுக் குழுவினர், அம்மக்களைக் கட்டுப்பாட்டுடனும் தைரியத்துடனும் இருக்குமாறு வேண்டிக்கொண்டு புறப்பட்டுச் சென்றனர். (ந.—தி.)

வருந்துகிறோம்

சென்னை, அக். 19—

நீண்ட நாட்களாகச் சுயமரியாதை இயக்கத்தின் முன்னேற்றத்திற்கு அரும்பாடு பட்டவரும், திராவிட இயக்க வளர்ச்சிக்கென்றே தன் பொருளை செலவிட்டவருமான புதுவை - போன். இராமலிங்கம் அவர்கள் சில நாட்களாக நோய்வாய்ப்பட்டிருந்து 3—10—56 அன்று இயற்கை எய்தினார்.

தொண்டுள்ளம் படைத்து, நற்பணியாற்றிய அந்த உத்தமரின் பிரிவால் வாடும் அவரது குடும்பத்தினருக்கும், நண்பர்களுக்கும் எமது அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

— (ஆ. - ர.)

கழகச் செய்திகள்

அகத்தியன்பள்ளியில் தி. மு. கழகத் துவக்கவிழா

14—10—56 மாலை 5½ மணிக்கு, அகத்தியர் கோவிலடியில் தோழர் முத்துமாணிக்கம் தலைமையில் துவக்க விழாப் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர் அய்யாதுரை கழகக் கொடியேற்றினார். தோழர்கள் இரசாக், சிவ. கனகசுந்தரம் ஆகியோர் சிறிதுநேரம் பேசினபின், தோழர் என். எஸ். இளங்கோ சொற்பொழிவாற்றினார். பின்னர், தோழர் கே. வி. கே. சாமி, சங்கரலிங்கனார் ஆகியோர் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்துத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

சேலம் 18-வது வட்ட தி. மு. க. அமைப்புக் குழு

14—10—56ல் சேலம் 18-வது வட்டத் தி. மு. கழக அமைப்புக் குழுக் கூட்டம் நடைபெற்றது. அதுபோது நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். செயலாளர்: எஸ். நடேசன்; துணைச்செயலாளர்: பி. எல். அம்பாயிரம்; பொருளாளர்: வ. தங்கவேலு; 8 செயற்குழு உறுப்பினர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

பெருமகளூரில் தி. மு. கழகம் அமைப்பு

12—10—56ல் தோழர் நா மாரிமுத்து தலைமையில் கிளைக் கழக அமைப்புக் கூட்டம் நடைபெற்று நிர்வாகிகளும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். செயலாளர்: ந வீரப்பெருமான்; துணைச் செயலாளர்: எஸ் சண்முகம்; பொருளாளர்: க இராமலிங்கம்; மாவட்டப் பிரதிநிதி: சு பெரியதம்பி செயற்குழு உறுப்பினர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

சென்னை—சூளை தி. மு. க.

14—10—56-ல், சென்னை—சூளை 17-வது வட்ட தி. மு. கழகப் பணிமனையில் நடைபெற்றச் செயற்குழுக் கூட்டத்தில், கழக வரவு - செலவுகள் ஏற்றுக்கொள்ளப்பட்டும், 21—10—56-ல் நடைபெறும் கூட்டத்தில் புதிய உறுப்பினர்களுக்கு அவர்கள் உரிமைத்தாள்களைக் கொடுப்பது என்றும், 28—10—56-ல் கிளைக் கழகப் பொது உறுப்பினர் கூட்டம் கூட்டுவதெனவும் முடிவு செய்யப்பட்டது.

திண்டுக்கல் தி. மு. கழகம்

12—10—56ல் கிளைக் கழக இல்லத்தில் நடைபெற்ற உறுப்பினர் கூட்டத்தில் நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். செயலாளர், துணைச்செயலாளர் ஆகியோரின் விலகல் கடிதம் ஒப்புக்கொள்ளப்பட்டு, தோழர்கள் என். முத்து; ஏ. சுப்பையா ஆகியோர் செயலாளர், துணைச்செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். தோழர்கள் பால்ராசு, முத்து, இலக்குமணன், மூக்கையா, வி. கருப்பையா, இராசாக் ஆகியோர் செயற்குழு உறுப்பினர்களாகச் சேர்த்துக்கொள்ளப்பட்டனர்.

ஆமதாபாத்தில் திராவிட நாடு பிரிவினை நாள் பொதுக்கூட்டம்

23—9—56 மாலை 5 மணிக்கு ஆமதாபாத் மாவட்ட தி. மு. கழகச் சார்பில் நரோடா ரோட் கன்னரிபாய் சாலில், தோழர் நா. முனுசாமி தலைமையில் நடைபெற்றது. தோழர் கி. சண்முகம் கொடியேற்றினார். தோழர் டி. பி. பாலகிருட்டிணன் வரவேற்புரை நிகழ்த்தினார். தோழர்கள் இரா. வைத்திலிங்கம், இரா. தணிகாசலம் ஆகியோர் சொற்பொழிவாற்றினர். தோழியர் இரத்தினம்மாள் இராசன் அவர்களின் இசை விருந்தும், முத்தமிழ் நாடக மன்ற இசைக் குழுவினரின் வில்லுப் பாட்டு நிகழ்ச்சியும், முத்தமிழ் நாடக மன்றத்தாரால் அண்ணா அவர்கள் எழுதிய 'பெரிய மனுஷன் அப்படித்தான்' நாடக நிகழ்ச்சியும் நடைபெற்றன.

வண்டிப்பெரியார் (திரு-கொச்சி) தி.மு.கழகம்

14—10—56 மாலை 6 மணிக்கு, வண்டிப்பெரியார் தென்னிந்தியத் தோட்டத் தொழிலாளர் சங்க அலுவலகத்தில் கிளைக் கழகச் செயற்குழுக் கூட்டம் தோழர் கே. எம். அப்பாஸ் தலைமையில் நடைபெற்றது. தோழர் ஆர். வியோன் தோழர் கே. வி. கே. சாமியின் உருவப் படத்தைத் திறந்துவைத்தும், தோழர்கள் செல்சன், பால்ராசு, கே. ஏ. கல்யழகன் ஆகியோர் தோழர் சாமியின் பொதுநலத் தொண்டுகள் குறித்தும் பேசினர். பின்னர், கிளைக் கழக நிதி திரட்டுவதற்கென பத்து பேரடங்கிய செயற்குழு ஒன்றும் அமைக்கப்பட்டது.

சேலம்—9-வது வட்ட தி. மு. கழகம்

7—10—56ல் சேலம் 9-வது வட்டம் செவ்வாய்பேட்டை தி. மு. கழகச் செயற்குழுக் கூட்டம் நடைபெற்றது. கழக நிர்வாகிகள்பதவியிலிருந்து விலகிக்கொண்ட தோழர்களுக்குப் பதிலாகத் தோழர்கள் கே. கே. இரத்தினம், டி. வி. சாம்ராச, கோபால் ஆகியோர் முறையே செயலாளர், துணைச் செயலாளர்களாகவும், தோழர் டி. கனகராச பொருளாளராகவும் நியமிக்கப்பட்டனர். நகரக் கிளைப் பிரதிநிதிகளாகத் தோழர்கள் கே. கே. இரத்தினமும் வி. கே. வரதராசலுவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். தோழர் சாமி மறைவுக்கு அனுதாபம் தெரிவித்துக்கொள்ளப்பட்டது.

அறந்தாங்கி தி. மு. கழகம்

14—10—56ல், தோழர் கா. மாரிமுத்து தலைமையில் நடைபெற்ற கழக உறுப்பினர் கூட்டத்தில் கழக வரவு-செலவு கணக்குகள் பரிசீலிக்கப்பட்டு ஒப்புக்கொள்ளப்பட்டன. தோழர்கள் மு. சீனிவாசன், மா. தியாகராசன் ஆகியோர் துணைச் செயலாளர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

ஆத்தூர் தொகுதி தி.மு.க.

14—10—56ல் செம்பட்டி வழிப்போக்கர் தங்கும் விடுதியில் ஆத்தூர் தொகுதி தி. மு கழக உறுப்பினர் கூட்டம் தோழர் ஏ. எம். டி. காச்சியப்பன் தலைமையில் நடைபெற்றது. ஆத்தூர் தொகுதி தி. மு. க. வட்டக் குழு அமைக்கப்பட்டு நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். செயலாளர்: ஏ எம். டி. காச்சியப்பன்; துணைச் செயலாளர்: தம்பிதுரை; பொருளாளர்: டி. எஸ். வி. வி. தியாகராசன். மேலும் சில முக்கிய முடிவுகள் மேற்கொள்ளப்பட்டன.

மாணவர்கள் சிறுவர்களாம்!

அவர்கள் கூச்சலிடுவதை கேட்பது முட்டாள்தனமாம்

பண்டிதரின் வழக்கமான வசைபாடும் போக்கு

ஷில்லாங், அக். 19—

"சில சிறுவர்கள் கூச்சலிடுவதைக் கேட்டுவிட்டு, அசாமில் ஒரு எண்ணெய் சுத்திகரிப்புத் தொழிற்சாலை நிறுவவேண்டும் என்று எவரேனும் கூறினல், அது ஒரு முட்டாள்தனமான செய்கையாகும்"

—என்று, பண்டித நேரு இங்கு நடைபெற்ற கூட்டம் ஒன்றில் பேசும்போது குறிப்பிட்டிருக்கிறார்.

"ஆர்ப்பாட்டக்காரர்கள், கலகம் விளைவித்து, இரயில்வே சொத்துக்களுக்கு சேதம் உண்டாக்குவது கண்டு நான் மிகவும் மனவேதனைப் படுகிறேன்.

சொத்துக்களை எரித்து, இரயில்வே தண்டவாளங்களைப் பெயர்த்து ஏன் அட்டகாசம் செய்கின்றனர் என்றே எனக்குப் புரியவில்லை.

"மாணவர்கள் இப்படித்தான் நடந்துகொள்ளுவார்கள் என்ருல், நான் நிச்சயமாகக் கூறுகிறேன்—அசாமில் எண்ணெய் சுத்திகரிப்புத் தொழிற்சாலை நிறுவப்படவே மாட்டாது.

"எண்ணெய் சுத்திகரிப்புத் தொழிற்சாலை நிறுவுவது என்ருல் பல கோடி ரூபாய் மூலதனமிட வேண்டும் என்று பொருள். தேசத்தின் "சொத்துக்களை, மாணவர்கள் அழித்தொழிக்கும் ஒரு இடத்தில் அப்படிபலகோடி ரூபாய்செலவில் ஒருதொழிற்சாலையை நிறுவும் ஆபத்தை விலைக்கு வாங்கிக்கொள்ள நான் விரும்பவில்லை"

என்றும், பண்டிதர் ஆத்திரம் கக்கினாராம்!

நாள் கூலி முறையை ஒழிப்பதற்குத் திட்டம்

துறைமுகத் தொழிலாளருக்கு சம்பள உயர்வு கிடைக்கும்

எர்ணுகுளம், அக். 19—

துறைமுகங்களில் சாமான்களை ஏற்றி இறக்கும் தொழிலாளருக்கும், மற்ற தொழிலாளருக்கும் நாள் கூலி ரூ. 1-லிருந்து ரூ. 2 ஆக உயர்த்தப்படுமெனத் தெரிகிறது.

தற்போது மாதத்தில் 12 நாட்களுக்கு மட்டுமே அவர்களுக்கு வேலைதரப்படுகிறது; இனிஅவர்களுக்குக் குறைந்தபட்சம் 21 நாட்கள் வேலை தரப்படுமாம்.

துறைமுகத் தொழிலாளர்கள் நிலையை விசாரித்த குழுவின் சிபாரிசுப்படி இந்தத் திட்டத்தை இந்திய அரசாங்கம் அமுல் நடத்தும்.

இதனல் சென்னை, பம்பாய், கல்கத்தா ஆகிய துறைமுகங்களில் வேலை செய்யும் தொழிலாளர் நிலை உயரும்.

வேலை நிறுத்தத்தைத் தவிர்க்க முயற்சி

முக்கூட்டு மாநாடு நடைபெறும்?

புதுடில்லி, அக். 18—

தங்கள் கோரிக்கைகளுக்கு அரசாங்கம் அங்கீகாரம் தராவிட்டால், நவம்பர் 15-ந் தேதி முதல் எல்லாத் துறைமுகங்களிலும் பணியாற்றும் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்வது என்று அறிவிக்கப்பட்டுள்ளதல்லவா?

இந்த வேலை நிறுத்தத்தைத் தவிர்ப்பதற்காக நவம்பர் முதல் வாரத்தில், இந்திய அரசாங்கம் ஒரு முக்கூட்டு மாநாடு நடத்துமென்று தெரிகிறது.

ஜிப்சம் சுரங்கத் தொழிலாளர் மறியல்

சென்னை, அக். 20—

கடந்த இரண்டு மாதச் சம்பளப் பாக்கி தங்களுக்கு இன்னும் தரப்படாததைக் கண்டித்து, உடனே பாக்கியைக் கொடுக்குமாறு கேட்டுக்கொண்டு தமிழ் நாடு ஜிப்சம் தொழிலாளர் சங்கத்தின் திரணி பாளையம் கிளையிலுள்ள 300 தொழிலாளர்கள், கடந்த 18-ந் தேதி காலை 8 மணியிலிருந்து அவ்வூர் டால்மியா கம்பெனிக் கருடமங்கலம் தா. நாராயணசாமி என்பார் வீட்டின்முன் அமைதியான முறையில் மறியல்செய்து வருகின்றனர்.

மேற்கூறப்பட்ட 300 தொழிலா

******-*******-**

ஆய்வுக்குழுவினரிடம் தேர்தல் நிதி அளிப்பு

தேர்தல் ஆய்வுக் குழுவினரைச் சந்திக்க வரும் கழகத் தோழர்கள், ஆதரவாளர்கள், பொது மக்கள் ஆங்காங்கு சிறு சிறு தொகைகளை ஆய்வுக்குழுவினரிடம் தந்து வருவதுடன், மேலும் தங்களின் பங்குக்குப் பெரும் நிதி திரட்டித்தர தயங்க மாட்டோம் என்று உறுதியளித்து வருகின்றனர்.

*******-****-******

சங்கரலிங்கனர் மறைவு:

சென்னையில் அனுதாபக் கூட்டம்

★

21—10—56 மாலை 6-மணிக்கு சென்னை— திருவல்லிக்கேணி கடற்கரையில், திரு. சங்கரலிங்கனர் மறைவை யொட்டி, தோழர் எச். டி. இராசா எம்.பி. தலைமையில் ஓர் அனுதாபப் பொதுக்கூட்டம நடைபெறும்.

தோழர்கள் எஸ். பி. ஆதித்தன், எம். ஆர். வெங்கட்ராமன், ஏ. எஸ். கே. அய்யங்கார், எஸ். இராமநாதன், கா. மு. ஷெரீப், சின்ன அண்ணமலை, எஸ். ஏ. ரகீம், கே. அருணசலம், எஸ். கே. தனுஷ்கோடி, காஞ்சி-கல்யாணசுந்தரம், க. அன்பழகன் ஆகியோர் பேசுவர்.

'மதம் மாறுவதால் பயனில்லை'

சிங்கப்பூரில்இராஜ்போஜ்கூறுகிருர்

சிங்கப்பூர், அக். 18—

"இந்தியாவிலுள்ள தாழ்த்தப்பட்டோர் பிரச்சினை சமூக, பொருளாதார விஷயங்களைப் பொறுத்தது; மதம் மாறுவது இதற்குப் பரிகாரமாகாது,"

என்று, ஷெட்யூல்டு வகுப்பு சம்மேளனத்தின் முன்னள் செயலாளர் இராஜ்போஜ், சிங்கப்பூர் தமிழர் சங்கச சார்பில் நடைபெற்ற கூட்டத்தில் பேசுகையில் கூறியுள்ளார்.

மேலும் அவர் 'கிறித்துவ மதத்திலும், மற்ற மதங்களிலும் சேர்ந்த பல்லாயிரக்கணக்கான தாழ்த்தப்பட்டோர்களின் நிலை எந்தவிதத்திலும் உயர்ந்துவிடவில்லை' என்பதைச் சுட்டிக் காட்டிப் பேசியுள்ளார்.

'புத்த மதத்திலோ வேறு மதத்திலோ சேருவது இந்தியாவில் உள்ள தாழ்த்தப்பட்டோரின் பிரச்சினைக்குப் பரிகாரமாகாது' என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

******************************-*****

தேர்தல் நிதி சிறப்புக் கூட்டம்

24—10—56 புதன் மாலை 5-30 மணிக்கு

சென்னை கோகலே மண்டபத்தில்

பேசுவோர்:

அண்ணா

இரா. நெடுஞ்செழியன்

என். வி. நடராசன்

ஈ. வெ. கி. சம்பத்

கே. ஏ. மதியழகன்

★

'தேர்தலும் தி. மு. கழகமும்'

என்ற தலைப்பில் சொற்பொழிவாற்றுவர்

★

நன்கொடை ரூ. 1. அணு 8.

குறிப்பு:—கூட்டத்திற்கான நுழைவுச் சீட்டுக்களை 20—10—56 சனி முதல் காலை 10 மணியிலிருந்து மாலை 6-மணி வரையில் தி. மு. க. தலைமை நிலையத்தில் பெற்றுக் கோள்ளலாம்.

—தலைமைக் கழகம் (தி. மு. க.)

*********-*****************************

வண்ணை இளைஞர் கழகம்

21—10—56 காலை 10-மணிக்கு சென்னை வண்ணை இளைஞர் கழகச் சார்பில் தனலட்சுமி உயாதர ஆரம்பப்பள்ளியில் திரு. கோ. வில்வபதி அவர்கள் 'நடுவு நிலையாமை' எனும் திருக்குறள் அதிகாரத்தை விளக்கி உரை நிகழ்த்துவார்.

'தமிழ் நாடு உருவாகும் நாளில் சிறையிலிருக்கப் போகிறேம்'

கிளர்ச்சி முடிவு பற்றி ம. பொ. சி.

சென்னை, அக். 19—

"புதிய தமிழ் மாநிலம், வரும் நவம்பர் முதல் தேதியன்று அமையும்போது நாங்கள் சிறையிலிருக்க முடிவு செய்துள்ளோம்.

"நான் உட்பட தமிழரசுக் கழகத்தின் எல்லாத் தலைவர்களும், எல்லைக் கமிஷன் கோரி மறியலில் ஈடுபட்டு, கைதாகி சிறைப்பட முடிவு செய்துள்ளோம்,"

என்று, தமிழரசுக் கழகத் தலைவர் ம. பொ. சி. அவர்கள் பெரம்பூர் பொதுக் கூட்டம் ஒன்றில் பேசும்போது குறிப்பிட்டிருக்கிருர் எனத் தெரியவருகிறது.

போலீஸ் நடவடிக்கை

சட்டவிரோதமாகக் கூட்டம் கூட்டியதாகவும், பொதுமக்களுக்கு இடையூறு உண்டாக்கியதாகவும், இ. பி. கோ. 143 351-வது பிரிவுகளின்படி தமிழரசுக் கழகத் தொண்டர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்படுமென்று ஒரு போலீஸ் அதிகாரி கூறியுள்ளதாகச் செய்தி ஒன்றின்மூலம் தெரியவருகிறது.

போலீஸ் தடையுத்தரவு

சென்னை சட்டசபை, மேல் சபை ஆகிய இரண்டும் கூடும் போது ஆர்ப்பாட்டங்கள் நடத்த முடிவு செய்யப்பட்டுள்ள நிலைமையைக் கருதி, அக். 23-ந்தேதி முதல் நவம்பர் 5-ந்தேதி வரையில் சட்டசபைக் கட்டிடத்தைச் சுற்றிலும் ஊர்வலங்கள் கூட்டங்கள் நடைபெறுவதைத் தடைசெய்து சென்னை போலீஸ் கமிஷனர் உத்தரவு பிறப்பித்துள்ளார்

900 ஆசிரியர்கள் வேலை நிறுத்தம்

சம்பளம் தராத சர்க்காருக்கு எதிராக நடவடிக்கை

அஜ்மீர் மாநிலத்தில் சர்க்கார் உதவி பெறுவனவற்றில் 97 பள்ளிகளைச் சேர்ந்த சுமார் 900 ஆசிரியர்கள், கடந்த 16-ந் தேதி முதல் வேலை நிறுத்தம் செய்துவருகின்றனர் என்று தெரியவருகிறது.

இந்த ஆசிரியர்களுக்கு கடந்த ஏப்ரல், மே, ஜூன் திங்களுக்கான சம்பளம் கிடைக்கவில்லை என்றும் அதனை எதிர்த்தே ஆசிரியர்கள் இப்போது வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டிருக்கின்றனர் என்றும் கூறப்படுகிறது.

இந்த வேலைநிறுத்தத்தால் சுமார் 25,000 மாணவர்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றனர் என்று தெரியவருகிறது.

...வர்களும், தங்களுக்குச் சேரவேண்டிய சம்பளப் பாக்கி முழுவதும் கொடுக்கப்படும்வரையில் தொடர்ந்து மறியலில் ஈடுபட இருப்பதாக அறிவித்திருக்கின்றனர்.

அமைதியான முறையில் மறியல் நடந்து வருகிறது. (ந-வி)

அரசியல் தியாகியிடம் அரசாங்கத்தின் கருணை

சென்னை, அக். 19—

காங்கிரஸ் அரசியல் தியாகிகளின் குறைகளைத் தீர்க்கக் கோரி, தியாகராயநகர் பசுலுல்லா ரோடில் உள்ள முதலமைச்சர் காமராசர் வீட்டை நோக்கித் தன் மனைவி—4 குழந்தைகளுடன் திருச்சி காங்கிரஸ் தியாகி ஒருவர் போய்க்கொண்டிருந்தபோது வழியிலேயே அவரைப் போலீசார் கைதுசெய்துவிட்டனராம்.

நன்றி அறிவிப்பு

5—10—56-ல், இராமநாதபுரம் திருப்பத்தூரில், தங்கள் தந்தையார் எஸ். சின்னதுரை இயற்கையெய்தியமை குறித்து நேரில் சென்றும், அஞ்சல், தந்தி மூலமும் அனுதாபம் தெரிவித்துக்கொண்ட தோழர்கள் அனைவருக்கும் தோழர்கள் சி. பீர், சி. அமீது தங்கள் நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கின்றனர்.

செங்கற்பட்டு மாவட்ட தாழ்த்தப்பட்டோர் பெடரேஷன் 3வது மாநாடு

21—10—56-ல், திருக்கழுக்குன்றம்—அரங்கம்பாக்கம், குப்புசாமி அரங்கில் மேற்படி மாநாடு நடைபெறும்; தோழர் ஏ. இரத்தினம் எம்.எல்.ஏ. தலைமை தாங்குவார்.

தோழர்கள் வி. வீராசாமி எம்.பி., சுந்தரராஜ் எம்.சி., கே. எம். சாமி, மணவாளன், சி. எம். நாகப்பா ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

மாதிமங்கலத்தில் அனுதாபக் கூட்டம்

21—10—56 மாலை, மாதிமங்கலத்தில், திரு. சங்கரலிங்கனர் மறைவை யொட்டி தோழர் கண்ணன் தலைமையில் அனுதாபப் பொதுக்கூட்டம் நடைபெறும். தோழர்கள் ஏ. எல். சி. கிருஷ்ணசாமி, இளஞ்செழியன் பேசுவர்.

சொற்பயிற்சிக் கூட்டம்

21-10-56 காலை 10 மணிக்கு, சென்னை 31-வது வட்டம் அழகிரி நினைவு மன்றப் பணிமனையில் 'திருக்குறளில் அமைச்சு' எனும் தலைப்பில் தோழர்கள் பலர் சொற்பொழிவாற்றுவர்.

-****

தேர்தல் ஆய்வுக் குழுச் சுற்றுப்பயணம்

★

அக்.	ஊர்	நேரம்	தங்கும் இடங்கள்
21	காரைக்குடி	மாலை 6 ,,	'இயூமன் காட்டேஜ்'—Human Cottage 5. முத்துப்பட்டிணம் 4-வது தெரு
22	பட்டுக்கோட்டை	காலை 9 ,,	காசாங்குளம் வடகரை சத்திரம் ஓய்வுவிடுதி
,,	தஞ்சை	பிற்பகல் 3 ,,	கீழவாசல். கோண்டிராசபாளையத் தண்ணீர்ப் பந்தல் கட்டிடம்
,,	மாயவரம்	மாலை 6 ,,	முனிசிபல் ஓய்வு விடுதி (மாயூரம் சந்திப்பு அருகில்)
23	கடலூர் N. T.	காலை 9 ,,	முசாபரி பங்களா

23—10—56 அன்று இரவு சென்னை வந்து சேருவார்கள்

'அறிவகம்' சென்னை
23—9—56

—தலைமைக் கழகம் (தி. மு. க.)

*************************************-**********-********

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப் பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.